இந்து சமய அறநிலையத்துறை

அனுப்புநர்

ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப.,
ஆணையர்,
சென்னை–34.

பெறுநர்

1. அனைத்து இணை ஆணையர்கள்
2. அனைத்து இணை ஆணையர்/ செயல் அலுவலர்
3. அனைத்து துணை ஆணையர்/ செயல் அலுவலர்கள்
4. அனைத்து உதவி ஆணையர்கள்
5. அனைத்து உதவி ஆணையர்/ செயல் அலுவலர்கள்

ந.க.எண். 31154 / 2010 எம்3 நாள் 30.11.2021

அய்யா,

பொருள்: அறநிறுவனங்களுக்குச் சொந்தமான அசையாச் சொத்துக்கள் குத்தகை / உரிமம், பொது ஏலம் / ஒப்பந்தபுள்ளி மூலம் வழங்கிட அறிவுரை வழங்குதல் – தொடர்பாக

பார்வை: 1) இவ்வலுவலக சுற்றறிக்கை ந.க.எண். 31154/2010/ எம்.3/ நாள் 19.08.2021
2) இவ்வலுவலக ந.க.எண்.31154/2010 எம்3 நாள் 20.11.2021

இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள அறநிறுவனங்களுக்குச் சொந்தமான நன்செய், புன்செய் நிலங்கள் ஏற்கனவே குத்தகைதாரர்களிடம் இருந்து ஆக்கிரமிப்பு என்ற முறையிலோ ஆர்.டி.ஆர். பதிவு பெறாமல் தொடர்ந்து வைத்திருந்தாலோ, குத்தகை தொகை சரிவர செலுத்தாமல் நிலுவை வைத்திருந்தாலோ, மேற்படி நிலங்களை திருக்கோயில் சுவாதீனத்திற்கு கொண்டு வந்து பொது ஏலத்தில் விட திருக்கோயில் நிர்வாகிகளால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அவ்வாறு பொது ஏலத்தில் விட நடவடிக்கை எடுக்கும்போது, ஆணையர் அனுமதிக்கு திருக்கோயில் செயல் அலுவலர்/நிர்வாகியால் விண்ணப்–பிக்கப்பட்டு இணை ஆணையர்/உதவி ஆணையர்களால் பரிந்துரைக்கப்படுகிறது.

எனவே, பார்வை 1–ல் கண்ட சுற்றறிக்கையின் மூலம் இனிவரும் காலங்களில் அறநிறுவனங்களுக்குச் சொந்தமான அசையா சொத்துக்கள் முதன்முறை பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி மூலம் வழங்கப்படும் இனங்களில் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகளை பின்பற்ற அனைத்து சார்நிலை அலுவலர்களுக்கு அறிவுத்தப்–பட்டுள்ளது. அதில் பத்தி 1–ல் "அறநிறுவனங்களுக்குச் சொந்தமான மனை/ கட்டிடங்களில் வாடகை/ குத்தகை உரிமத்தினை முதன்முறை பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி மூலம் வழங்கப்படும் இனங்களில் இதுவரை ஆணையருக்கு விண்ணப்பித்து அனுமதி பெறப்பட்டு வந்த நிலையில், பார்வை 1–ல் கண்ட சுற்றறிக்கை

Verified © RealEstate™

தேதியிலிருந்து அந்தந்த மண்டலத்திற்குரிய அறநிறுவனங்களின் அசையாச் சொத்துக்கள் குறித்த அனைத்து வகை முதன்முறை ஏலத்தை அங்கீகரித்து மண்டல இணை ஆணையர்களே ஏல அனுமதி வழங்கிக் கொள்ள ஆணையரால் அதிகாரப் பகிர்வு அளிக்கப்படுகிறது" என உள்ளது. மேலும், முதன்முறை ஏல அனுமதிக்கும் அங்கீகாரத்திற்கும் அதிகாரப் பகிர்வு அளிக்கப்பட்டிருந்தது.

மேலும், பார்வை 2-ல் கண்ட சுற்றறிக்கையின் மூலம் பட்டியலைச் சேராத திருக்கோயில்களின் (பிரிவு-49) அசையாச் சொத்துக்களை முதன்முறை ஏல அனுமதிக்கு உத்திரவு வழங்கும் அதிகாரம் உதவி ஆணையர்களுக்கு வழங்கப்படுகிறது எனவும், முதன் முறையாக ஏலம் நடத்தியமைக்குரிய விவர அறிக்கையை உதவி ஆணையர்கள் நேரடியாக ஆணையருக்கு அனுப்பி விட்டு அதன் நகலை இணை ஆணையருக்கு தகவலுக்காக அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

எனவே, பார்வை 1 மற்றும் 2-ல் கண்ட **சுற்றறிக்கைகளுக்கு கீழ்க்கண்டவாறு திருத்தம் செய்து உத்தரவிடப்படுகிறது.** இதனை பின்பற்றி செயல்படுமாறு அனைத்து சார்நிலை அலுவலர்களையும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

1) இந்து சமய அறநிலையத்துறையின் அந்தந்த மண்டலத்திற்குரிய பட்டியலைச் சேர்ந்த அறநிறுவனங்களின் அசையாச் சொத்துக்கள் குறித்த அனைத்து வகை முதன்முறை ஏலத்திற்கான அனுமதியினை, அந்தந்த மண்டல இணை ஆணையர்களே வழங்கிட அதிகார பகிர்வு அளிக்கப்படுகிறது.
2) மேலும், பட்டியலைச் சேராத அறநிறுவனங்களின் அசையாச் சொத்துக்கள் குறித்த அனைத்து வகை முதன்முறை ஏலத்திற்கான அனுமதியினை, அந்தந்த உதவி ஆணையர்களே வழங்கிட அதிகார பகிர்வு அளிக்கப்படுகிறது.
3) அனைத்து வகை ஏலத்திற்கான அங்கீகாரம் செய்வது தொடர்பாக பட்டியலைச் சேர்ந்த மற்றும் பட்டியலைச் சேராத அனைத்து அறநிறுவனங்களுக்கும், ஏற்கனவே உள்ள நடைமுறையின்படி ஆணையருக்கு அனுப்பி அங்கீகாரம் பெறப்பட வேண்டுமென அறிவுறுத்தப்படுகிறது.

இச்சுற்றறிக்கை விவரத்தை தங்களது ஆளுகையின் கீழ் உள்ள அனைத்து சார்நிலை அலுவலர்களுக்கும் தெரிவிக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/-ஜெ.குமரகுருபரன்
ஆணையர்

/உ.ந.உ.ப./

30.11.2021
கண்காணிப்பாளர்

நகல் -

இவ்வலுவலக ஆர், வி, எம் பிரிவுகளுக்கு/ எண்ணிடல் மூலம்

30.11.2021

மிகை.

Verified © RealEstate™